செ.வெ.எண்: 240 நாள்: 27/03/2017

**பத்திரிகைச் செய்தி**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 95 ஊராட்சிகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 50179 பயனாளிகள் பயன் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு 01.04.2017 முதல் 31.03.2022 வரை பணிபுரிய ஏதுவாக வேலை அடையாள அட்டை புதுப்பிக்கப்பட்டு விநியோகம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, பயனாளிகள் 31.03.2017-க்குள் புதிய வேலை அடையாள அட்டையினை பெற்று இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்., மேற்படி திட்டத்தில் புதிதாக பயன்பெற விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட உழைக்கும் திறன் கொண்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தங்களது வங்கிக் கணக்கு புத்தக நகல், ஆதார் எண் நகல் மற்றும் 2 புகைப்படங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி)-ஐ தொடர்பு கொண்டு இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

27.3.7

3/3

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

27.07.17